# தூதன்

தூதன் - 30 அக்டோபர் - 2022 தூது - 10

நானோ நீ நிந்தித்த இஸ்ரவேலுடைய இராணுவங்களின் தேவனாகிய சேனைகளுடைய கர்த்தரின் நாமத்திலே உன்னிடத்தில் வருகிறேன். 1 சாமுவேல் 17:45




Private Circulation only

தென்னிந்தியத் திருச்சபை, தமிழ் சபை - துபாய்

# தென்னிந்தியத் திருச்சபை
## தமிழ் சபை - துபாய்


| | |
|---|---|
| சபை போதகர் மடல் | 01 |
| உதவி போதகர் மடல் – ஃபுஜைரா | 05 |
| உதவி போதகர் மடல் – இராஸ் அல் கைமா | 07 |
| செயலர் மடல் | 10 |
| நீங்கள் கிறிஸ்தவரா | 12 |
| கன்மலை வீடு | 13 |
| திருச்சபை ஜெபநாள் | 14 |
| வேதவினா போட்டி | 16 |
| Health Tips | 18 |
| Children's Corner | 21 |
| Birthday Celebrants | 26 |
| Wedding Anniversary | 31 |
| Bible Character - SARAH | 32 |



**P.O.Box: 8785, Dubai. Mob: 050-5533645**
**Email: office@csitamilparishdubai.com**
**Website: www.csitamilparishdubai.com**

# சபை போதகர் மடல்

கிறிஸ்துவுக்குள் பிரியமான அன்பு இறைமக்களே!
ஆண்டவரும் உலக இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின்
இனிய நாமத்தில் அன்பின் நல்வாழ்த்துக்கள்
கூறிக்கொள்வதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

"அறுவடைக்கு ஆயத்தமாவோம்"
Let's get ready for the harvest
யோவான் 4:35-38

பிதாவாகிய தேவனுக்கு கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் துதியும் கனமும் மகிமையும் ஏறெடுக்கிறோம். தங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் வேலைகளை சீஷர்கள் ஆர்வத்தோடு செய்ய வேண்டும். ஊழியத்தில் அக்கறை காண்பிக்க வேண்டும். இயேசுவின் சீஷர்கள் அவரோடுகூட ஊழியம் செய்கிற உடன் ஊழியக்காரர்கள். ஆகையினால் தங்களுடைய சுபாவத்தின்படி ஊழியம் செய்யாமல், இயேசு கிறிஸ்துவைப் போல ஊழியம் செய்ய வேண்டும். சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணுவதே அவர்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கும் ஊழியம். இந்த ஊழியம் விளைந்திருக்கிற கதிர்களை அறுவடை செய்யும் வேலைக்கு ஒப்புமையாக இங்கு கூறப்பட்டிருக்கிறது. (யோவான் 4:35-38)

ஏசாயா 48:3, லூக்கா 3:3, கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள் என்ற வார்த்தைகள், இந்த கடைசி காலத்திலே நமக்கு விடுக்கப்படுகின்ற அழைப்பாய் இருக்கிறது. நாம் ஆத்துமாக்களை அறுவடை செய்ய அனுப்பப்பட்டு இருக்கிறோம். அறுவடை என்பது நிலத்தில் விளைந்ததை ஆட்களைக் கொண்டு சேகரிப்பது என்ற பொருள்படுகிறது. வேதாகமத்தில் புதிய ஏற்பாட்டில் அறுவடை என்ற வார்த்தை இழந்தவர்களை, தண்டிக்கப்பட்டவர்களை, அவருடைய மந்தையிலே சேர்த்துக் கொள்ளுதல் என்ற பொருளிலேயே குறிப்பிடப்பட்டிருக்கிறது. மத்தேயு 9:36-ஆம் வசனம் திரளான ஜனங்கள் மேய்ப்பன் இல்லாத ஆடுகளைப் போல சிதறடிக்கப்பட்டவர்கள் அப்படிப் பட்டவர்களை ஆத்தும அறுவடை செய்ய (அறுப்பு மிகுதி) அறுப்பு மிகுதியாக இருக்கிறது. ஆனால் அறுவடை செய்ய ஆட்கள் இல்லை என்பதை இயேசு கிறிஸ்து தெளிவு படுத்துவதைக் காண்கிறோம். அங்கே சீஷர்கள் 12 பேர் மாத்திரம் இருந்தார்கள். மத்தேயு 9:37 அவர்கள் அறுப்புக்கு போதாதவர்களாக இருக்கிறார்கள். அறுவடை செய்ய அநேக சீஷர்கள் வேண்டுமென்று கிறிஸ்து நம்மையும் சீஷர்களாய் அழைக்கிறவராய் காணப்படுகிறார்.

யோவான் 4:36-இல் காண்கிறது போல, விதைக்கிறவர் தேவன் அறுக்கிறவர்கள் நாம் இருவரும் சந்தோஷப்பட தக்கதாக நாம் கூலியாக நித்திய ஜீவன் என்ற பலனை பெற்றுக்கொள்ள நமக்கு அறைகூவல் விடுக்கப்பட்டிருக்கிறது. அறுவடைக்கு நாம் ஆயத்தமாக வேண்டும். முதலில் நாம் நம்மை அறுவடை செய்ய ஆயத்தப்படுத்திக் கொள்ள வேண்டும். அவரின் சீஷர்களாய் மாறி சுவிசேஷத்தைச் சுமக்க வேண்டும்.

## நம்மை நாம் ஆயத்தப்படுத்திக் கொள்வோம் - Let us prepare ourselves

நீதி.10:5. கோடைக்காலத்தில் சேர்க்கிறவன் புத்தியுள்ள மகன் அறுப்புக்காலத்தில் தூங்குகிறவனோ இலச்சையை உண்டாக்குகிற மகன்.

கர்த்தர் நமக்குக் கொடுக்கும் வாய்ப்புக்களை நாம் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். கோடைக் காலத்தில் சேர்க்கிறவன் புத்தியுள்ள மகன். அறுப்புக் காலத்தில் அறுவடை செய்கிறவன் ஞானமுள்ளவன். கோடை காலம் சேர்க்கிற காலம். குளிர் காலத்திலும் மழைக் காலத்திலும் நம்மால் ஒன்றையும் சேர்க்க முடியாது. எல்லாவற்றிற்கும் ஒரு காலமுண்டு. நாம் ஒவ்வொரு காரியத்தையும், அதினதன் காலத்தில் நேர்த்தியாய்ச் செய்து முடிக்க வேண்டும்.

ஞானமுள்ளவர்கள் அறுப்புக் காலத்தில் தூங்க மாட்டார்கள். அறுப்புக் காலத்தில் தூங்குகிறவன் தன்னுடைய பெற்றோருக்கு இலச்சையை உண்டாக்குகிறான். இவனுடைய சோம்பேறித்தனத்தினால் பெற்றோரின் சந்தோஷமும், ஆறுதலும் பறிபோய்விடும். ஒரு வேலையும் செய்யாமல் தூங்குகிறவன் மிகப்பெரிய சோம்பேறி. இவன் தன்னுடைய கடமைகளை அசட்டைபண்ணுகிறான். தூங்கவேண்டிய நேரத்தில் தூங்கலாம். அறுப்புக் காலத்தில் சுறுசுறுப்பாயிருக்க வேண்டும்.

அறுப்புக் காலத்தில் தூங்குகிறவன், மழைக் காலத்திற்கு வெட்கத்தையும் அவமானத்தையும் சேமித்து வைக்கிறான். நம்முடைய வாலிப நாட்களை நாம் பிரயோஜனப் படுத்திக்கொள்ள வேண்டும். வாலிப நாட்களில் கர்த்தரை நினைத்து, ஆவிக்குரிய உபதேசங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும். வாலிபக் காலத்தில் ஒருவேலையும் செய்யாமல் தூங்குகிறவர்கள், தங்களுடைய முதிர்வயதில் மிகவும் கஷ்டப்படுவார்கள். அப்போது மற்றவர்களையும் கஷ்டப்படுத்துவார்கள்.

கோடைக்காலம் வரும்போதே, நாம் மழைக்காலத்தையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அறுப்புக்காலம் வரும்போதே, நாம் விதைப்புக் காலத்தையும் யோசிக்க வேண்டும். ஒவ்வொரு காலத்திலும், நாம் செய்ய வேண்டிய வேலைகளை சுறுசுறுப்பாய்ச் செய்தால்தான், நமக்கும் நல்லது. நம்மை நம்பியிருக்கிற நம்முடைய குடும்பத்தாருக்கும் நல்லது.

மத்தேயு 13:23-இல் சொல்வதைப் போல் நாம் நல்ல நிலங்களாய் வசனங்களைக் கேட்டு நூறும், அறுபதும், முப்பதுமாக பலன் தருகிறவர்களாய் மாற வேண்டும். லூக்கா 20.25-இல் பிரதான ஆசாரியும் வேதபாரகரும் அவரைச் சோதிக்கும்படி ராயனுக்கு வரி கொடுப்பது நியாயமா என்று கேட்கிறார்கள். இயேசு அவர்களை நோக்கி, ஒரு பணத்தை எனக்குக் காண்பியுங்கள் என்றார். காண்பித்த போது அதிலே தற்போது நாணயங்களிலே தலைவர்கள் அல்லது அரசர்கள் உருவங்கள் பொரிக்கப்படுவது போல அந்த நாணயத்தில் ராயனுடைய உருவம் பொறிக்கப்பட்டிருந்தது. அதைப் பார்த்து அவர் ராயனுடையதை ராயனுக்கும் தேவனுடையதை தேவனுக்கும் கொடுங்கள் என்றார். ராயன் உருவம் பொறிக்கப்பட்ட காசை ராயனுக்கு வரிப் பணமாகக் கொடுங்கள். நாணயத்தை வைத்திருந்தவனுடைய நெற்றியில் தேவனுடைய நாமம் தரிக்கப்பட்டு இருப்பதை அவர் கண்டு உன்னை தேவனுக்குக் கொடு என்றார். பிரியமானவர்களே நம்முடைய நெற்றியிலும் தேவனுடைய நாமம் தரிக்கப்பட்டிருக்கிறது. நாம் நம்மை அவருக்குக் கொடுத்து அவருடைய சீஷர்களாய் மாறி சீஷர்களைப் போல நாமும் ஆத்துமாக்களை அறுவடை செய்ய ஆயத்தமாவோம்.

## கொடுப்பதன் மூலம் உண்டாகும் ஆசீர்வாதத்தை நாம் பெற்றுக் கொள்வோம் By giving we receive blessings

லூக்கா 21:3-இல் ஏழை விதவை இரண்டு காசுகளை காணிக்கையாகப் போட்டதை அவள் எல்லாரையும் பார்க்கிலும் அதிகமாய் போட்டாள் என்று இயேசு சொல்லுகிறதைக் காண்கிறோம்.

இந்த சம்பவம் மாற்கு எழுதின சுவிசேஷத்திலும் எழுதப் பட்டிருக்கிறது. இதன் சத்தியத்தை நமக்குத் தெளிவாக உபதேசிக்க வேண்டும் என்பதற்காக இவ்விரண்டு சுவிசேஷங்களிலும் இந்த சம்பவம் எழுதப்பட்டிருக்கிறது. ஏழைகளுக்கு உதவிபுரிய வேண்டும் என்பது கிறிஸ்தவமார்க்கத்தின் முக்கியமான உபதேசமாகும். நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து ஏழைகளுக்கு உதவிபுரிவதை அங்கீகரித்து, அதை மேன்மைப்படுத்துகிறார். நாம் ஏழைகளுக்கு எப்படி உதவிபுரிகிறோம் என்பதைப் பார்ப்பதற்காக, இயேசுகிறிஸ்துவின் கண்கள் நம்மீது நோக்கமாயிருக்கிறது.

இயேசுகிறிஸ்து சத்தியத்தை உபதேசிக்கிறவர். தம்முடைய போதகத்தைக் கேட்கும் ஜனங்களை தமது கண்களால் பார்த்து போதகம் பண்ணுகிறவர். அதே வேளையில் காணிக்கைப் பெட்டியிலே ஜனங்கள் தங்கள் காணிக்கைகளைப் போடுகிறதையும் இயேசுகிறிஸ்து காண்கிறார்.

தேவன் நமக்குக் கொடுத்திருக்கும் அளவுக்குத்தக்கபடி நாம் உற்சாகமாக, அதிகமாக காணிக்கை கொடுக்கிறோமா அல்லது மனவருத்தத்தோடு கஞ்சத்தனமாக காணிக்கை கொடுக்கிறோமா என்பதையெல்லாம் அவர் பார்த்துக் கொண்டிருக்கிறார்.

மற்றவருக்குத் தெரியாமல் நாம் ரகசியமாக காணிக்கைக் கொடுக்கும்போது, தேவன் அதற்கு வெளிப்படையாக வெகுமதி கொடுக்கிறார். விசுவாசிகள் கர்த்தருடைய ஊழியத்திற்குக் காணிக்கை கொடுப்பதையும், ஏழைகளுக்கு உதவிபுரிவதையும் நிறுத்திவிடாமல் தொடர்ந்து செயல்படுத்த வேண்டும். செல்வந்தர்கள் காணிக்கை கொடுப்பதுபோல ஏழைகளும் காணிக்கை கொடுக்கவேண்டும். இந்த சம்பவத்தில் ஒரு ஏழை விதவை காணிக்கைப் பெட்டியிலே இரண்டு காசை தன்னுடைய காணிக்கையாகப் போடுகிறாள். காணிக்கையின் தொகை சிறியதாக இருந்தாலும், இயேசுகிறிஸ்து இந்தக் காணிக்கையையும் அங்கீகரிக்கிறார்.

இயேசு கிறிஸ்து அவள் போட்ட பணத்தைப் பார்க்கவில்லை. அவள் தன் ஜீவனுக்கு உண்டானதை அங்கே செலுத்துகிறதைப் பார்க்கிறார். அவள் நித்திய ஜீவனை தரித்துக் கொண்டவளாய் ஆண்டவருடைய ஆசீர்வாதத்தைப் பெற்றவளாய் செல்கிறாள். நாமும் கூட அவருடையவர்களாக இருக்கிறோம். நம்முடையதெல்லாம் அவருடையதாய் இருக்கிறது. நம்மையும் நம்முடையதையும் தேவனுக்குக் கொடுத்து ஏழை விதவைப் பெற்ற ஆசீர்வாதத்தைப் போல நாமும் நம்முடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்வோம். ஆசீர்வாத மாத்திரமல்ல அறுவடைக்குரிய கூலியாகிய நித்திய ஜீவனை நாம் பெற்றுக் கொள்வோம். நம்முடைய ஜீவன் எங்கே இருக்கிறது. கொலோசெயர் 3:3-இல் காண்கிறது போல நம்முடைய ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது. கொலோசெயர் 3:1 கிறிஸ்து தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார். அறுவடை செய்கின்றவர்களாய் நாம் இருப்போமேயானால் அதன் கூலியாகிய நித்திய ஜீவனை பெற்றுக் கொண்டு அவருடனே கூட ராஜ்ஜியத்தில் வீற்றிருப்போம் என்பதற்கு சந்தேகம் இல்லை. சீஷர்களாய் மாறுவோம், அறுவடை செய்ய ஆயத்தமாக, நம்முடையதை தேவனுக்குக் கொடுப்போம். அதற்குண்டான ஆசீர்வாதங்களை நாம் பெற்றுக் கொள்வோம். தேவன் தாமே நம்மோடு இருந்து நம்மை வழிநடத்திக் காப்பாராக. ஆமென்.

உங்கள் திருப்பணியில்,
அருள்திரு. மோ. ஐசக் பெர்னாண்டஸ்.
சபை ஆயர்.

Praise & worship - International City





Choir- Dubai



Junior Church - Dubai





Corner Stone - Dubai






Summer Camp - Dubai



# உதவி போதகர் மடல்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய திருப்பெயரால் என் அன்பின் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மலைகள் விலகினாலும், பர்வதங்கள் நிலைபெயர்ந்தாலும், என்கிருபை உன்னைவிட்டு விலகாமலும், என் சமாதானத்தின் உடன்படிக்கை நிலைபெயராமலும் இருக்கும் என்று, உன்மேல் மனதுருகுகிற கர்த்தர் சொல்லுகிறார். ஏசாயா 54:10

புதிதாக முட்டையிட்டு குஞ்சுகளை ஈன்றெடுத்த தாய்க்கோழி தன் பிள்ளைகள் பெரிதாகின்ற வரை தன் செட்டைகளுக்குள் மறைத்து மிகப் பாதுகாப்பாய் பராமரிக்கும். சில சமயங்களில் குஞ்சுகள் தாயை விட்டுத் தூர செல்லும்பொழுது கழுகு, காகம் போன்றவற்றினால் ஆபத்து ஏற்படும். அப்போது தாய்க்கோழி அவற்றை எதிர்த்து, சண்டையிட்டு தன் குஞ்சுகளைத் தன் செட்டைகளுக்கு உள்ளாக மறைத்து அதன் பாதுகாப்பை உறுதி செய்யும். அச்சுறுத்தல் நிறைந்த இந்தச் சூழலில் குஞ்சுகள் பாதுகாப்பையும் சமாதானத்தையும் பெற்றுக் கொள்ளும். அதே போலத்தான் வழி விலகிப்போய் நம்பிக்கை இழந்து, சிதறடிக்கப்பட்டு சமாதானமற்ற நிலையில் வாழ்ந்து வந்த இஸ்ரவேல் மக்களுக்கு ஏசாயா இறைவாக்கினர் வழியாக ஆண்டவர் சமாதானத்தின் உடன்படிக்கையை மனதுருகி ஏற்படுத்துகிறார்.

"மலைகள் விலகினாலும், பர்வதங்கள் நிலைபெயர்ந்தாலும், என்கிருபை உன்னைவிட்டு விலகாமலும், என்சமாதானத்தின் உடன்படிக்கை நிலைபெயராமலும் இருக்கும் என்று, உன்மேல் மனதுருகுகிற கர்த்தர்சொல்லுகிறார்."

மனதுருக்கத்திற்கு கிரேக்கத்தில் வரும் சொல்லின் சரியான பொருள் "கருவறையினின்று வெளிப்படும் பாசம்" என்பதேயாகும், splangkhna என்றால் கருவறை அல்லது அடிவயிறு என்றே பொருள்படும். அதேபோல பழைய ஏற்பாட்டிலும் கடவுளின் மனதுருக்கத்தைக் குறிக்க பயன்படுத்தப்பட்டுள்ள எபிரேயச் சொல்லும் கருவறையைக் குறிக்கும் எபிரேயச் சொல்லும் ஒன்றேயாகும்.

ஆக, ஒரு தாய் தன் இரத்தமும் சதையும் உயிரும் உணர்வுமாயிருக்கிற தன் குழந்தைமீது கொள்ளும், அனைத்தையும் கடந்த பேரன்பையே கடவுள் தம் மக்கள்மீது வைத்திருக்கிறார்.

இன்று ஏதோ ஒரு காரணத்திற்காகச் சிதறடிக்கப்பட்ட நிலையில் நம்பிக்கை இழந்த சூழ்நிலையில் சமாதானம் அற்றவர்களாக இருக்கின்றீர்களா, உங்களை ஒரு தாய்போல உள்ளங்கைகளில் ஏந்தி, சுமந்து உங்கள் சூழ்நிலையில் இருந்து விடுதலையும் நம்பிக்கையும் அருளுவதற்கு ஆண்டவர் வல்லமை உள்ளவராய் இருக்கிறார்.

சமாதானத்தின் கடவுள் தாமே இம்மாதம் முழுவதும் உங்களோடு கூட இருந்து ஆசிர்வதித்து வழிநடத்துவராக ஆமென்.

கிறிஸ்துவின் பணியில்,
அருட்திரு. நத்தானியேல்
உதவி போதகர் ∴புளைஜரா

## வருந்துகிறோம்

**"கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்"**

நமது சபை அங்கத்தினர்கள்
Mrs. Leelabai Balan, Mr. David Rajan ஆகியோரின் சகோதரர்
Mr. Mohan அவர்களின் துணைவியார்
Mrs. Anitha Mohan அவர்கள் கடந்த 14-09-2022 அன்றும்

நமது சபை அங்கத்தினர்
Mr. Suthakar Jeyaseelan அவர்களின் தகப்பனார்
Mr. Alfred Chandrasekaran அவர்கள் கடந்த 16-09-2022 அன்றும்

நமது சபை அங்கத்தினர்
Mrs. Anni Jone Mahiban அவர்களின் அத்தை
Mrs. Dhanam Reginald அவர்கள் கடந்த 19-09-2022 அன்றும்

நமது சபை அங்கத்தினர்
Mr. D. Ravindran அவர்களின் மகன்
Mr. Kingsley Ravindran அவர்களின் மாமா
Mr. R.Prabakaran அவர்கள் கடந்த 19-09-2022 அன்றும்
கர்த்தருக்குள் நித்திரை அடைந்துள்ளார்கள்.

# உதவி போதகர் மடல்

அன்பிற்கினிய இறை அன்பர்களே,
ஆண்டவரும், மீட்பருமாகிய இயேசுகிறிஸ்துவின்
திருப்பெயரில் உங்களை வாழ்த்துகிறேன்.

"எனக்கு சாட்சிகளாயிருப்பீர்கள்" அப்போஸ்தலர் 1:8
"you will be my witnesses" Acts 1:8

இந்த வார்த்தையானது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் எதிர்கால வாக்குத்தத்தமாக அமைகிறது. இன்றைய உலகில் அவருக்குச் சாட்சியாக இருப்பது என்பது மிகவும் குறைவுபட்டே காணப்படுகிறது. இச்சூழலில் அவருக்குச் சாட்சிகளாயிருக்க நாம் என்ன செய்யவேண்டும் என்பதை ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து கற்றுக்கொடுக்கிறார்.

### ஆண்டவரைக் குறித்து சாட்சி கொடுங்கள்:

நாம் இந்த உலகில் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவைக் குறித்து மாத்திரமே சாட்சி கொடுக்க அழைக்கப்படுகிறோம். யோவான் ஸ்நானகனைப் பார்ப்போமானால், அவர் ஆண்டவரைக் குறித்து மாத்திரமே சாட்சி கொடுக்க வந்தவராகப் பார்க்கிறோம். யோவான் 1:7,8,15, 34 ஆகிய வசனங்களில், சாட்சிகளாயிருக்க விரும்பினால் யோவானைப்போல சாட்சி கொடுக்கவேண்டும். எப்படியெனில் அவருடைய பாதரட்சையை அவிழ்க்க பாத்திரனல்ல என்ற தாழ்மை. இறுதிவரை கடவுளின் வார்த்தைக்காகத் தன்னையே கொடுத்த அர்ப்பணிப்புள்ள வாழ்க்கை. நாமும் அந்த ஒப்படைப்போடு சாட்சி கொடுக்க அழைக்கப்படுகிறோம்.

### ஆண்டவரிடம் சாட்சியைப் பெற்றுக்கொள்ளுங்கள்:

ஆண்டவரைக் குறித்து சாட்சி கொடுக்கின்ற நாம் அவரிடம் எப்படிப்பட்ட சாட்சியைப் பெற்றுக்கொள்கிறோம் என்பது மிக முக்கியமானது. மத்தேயு 11:11-ல் யோவான் ஸ்நானகனைக் குறித்து ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சாட்சி கொடுக்கிறார். ஸ்திரீகளிடத்தில் பிறந்தவர்களில் யோவான் ஸ்நானகனைப் பார்க்கிலும் பெரியவன் ஒருவனும் எழும்பினதில்லை. யோவான் 1:47-ல் இயேசு நாத்தான்வேலை தம்மிடத்தில் வரக்கண்டு அவனைக்குறித்து: இதோ கபடற்ற உத்தம இஸ்ரவேலன் என்று சாட்சி கொடுக்கிறார். லூக்கா 7:9-ல் நூற்றுக்கதிபதியைக் குறித்து இஸ்ரவேலுக்குள்ளும் நான் இப்படிப்பட்ட விசுவாசத்தைக் காணவில்லை என சாட்சி கொடுக்கிறார். ஆகவே நாம் ஆண்டவரிடம் எப்படிப்பட்ட சாட்சியைப் பெற்றுக்கொள்ளப்போகிறோம்.

### ஆண்டவருக்கு சாட்சிகளாயிருங்கள்:

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்து பரலோகத்திற்கு எடுத்துக் கொள்வதற்கு முன்பு அப்போஸ்தலர் 1:8-ல் தம்முடைய சீஷரை நோக்கிக் கூறிய வார்த்தைகள், பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என வாக்குரைக்கிறார். பரிசுத்த ஆவியானவர் நம்முடைய வாழ்விலே தேற்றரவாளனாக, துணையாளராக, வழிகாட்டியாக செயல்படும்போது நாம் ஆண்டவர் சொன்னதுபோல பூமியின் கடைசி பரியந்தமும் சாட்சிகளாக இருக்கமுடியும்.


ஆண்டவருக்கு சாட்சிகளாயிருக்க வேண்டுமெனில் அவரைக்குறித்து மாத்திரம் சாட்சி கொடுங்கள். அவரிடம் மாத்திரம் நற்சாட்சியைப் பெற்றுக்கொள்ளுங்கள். ஆண்டவர்தாமே அவருடைய சாட்சிகளாயிருக்க நம்மை வழிநடத்துவாராக. ஆமென்.

ஆண்டவரின் அருட்பணியில்
அருட்பணி. எ.ஜெம்சன் ஜெபசிங்.
உதவி போதகர், இராஸ் அல் கைமா.

**திருமறைப் பாட ஒழுங்குகள் - அக்டோபர் 2022**

| நாள் | தியானப் பொருள் | பழைய ஏற்பாடு | நிருப வாக்கியம் | நற்செய்தி பகுதி | சங்கீதம் |
|---|---|---|---|---|---|
| 02-10-2022 | அனைத்து விசுவாசிகளின் ஆசாரியத்துவம் | ஏசாயா 61:1-11 | 1 பேதுரு 2:1-10 | யோவான் 17:1-8 | 135:12-21 |
| 09-10-2022 | மாற்றுத் திறனாளிகளை கனிவுடன் கனப்படுத்தல் | 2 சாமுவேல் 9:1-13 | அப்போ. 9:32-35 | மாற்கு 3:1-6 | 146 |
| 16-10-2022 | கடவுளின் வாக்கைக் கொண்டாடுதல் | 1 சாமுவேல் 2:1-10 | எபிரெயர் 11:29-40 | லூக்கா 1:39-45 | 66 |
| 23-10-2022 | நுகர்வு பண்பாட்டிற்கு கிறிஸ்தவ மறுமொழி | ஆதியா. 3:1-7 | பிலிப்பியர் 3:17-21 | மத்தேயு 6:25-34 | 37 |
| 30-10-2022 | நீதி, சமாதானம் என்னும் கடவுளுடைய இறையாண்மையை கொண்டாடுதல் | யாத்தி. 7:1-7 | ரோமர் 13:1-7 | யோவான் 18:33-38 | 89:1-18 |

# இராஸ் அல் கைமா கிளைச்சபை




Location map URL

http://wikimapia.org/#lat=25.6653253&lon=55.8083828&z=19&l=0&m=b

Contact No : 050 5219007

## ஸ்தோத்திரப் பண்டிகை 2022

நாள் : 08-10-2022 சனிக்கிழமை

இடம் : St.Luke Church, Al Hamra Al Jazeera

நேரம் : மாலை 6.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை

## நிகழ்வு முறைமை

மாலை 06:00மணி : ஸ்தோத்திரப் பண்டிகை ஆராதனை

மாலை 07:00மணி : ஏல விற்பனை

## நிறைவு ஜெபம் – ஆசீர்வாதம்

ஊக்கமாய் ஜெபியுங்கள்!
மனப்பூர்வமாய் காணிக்கை கொடுங்கள்!!
உற்சாகமாய் பங்கு பெறுங்கள்!!!

கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பாராக!

# செயலர் மடல்

எழுபத்தைந்து ஆண்டைக் கடந்து புதிய சகாப்தத்திற்கு நேராக, புதிய திட்டங்களோடு, எதிர்பார்ப்புகளோடு, தீர்மானங்களோடு, கர்த்தருடைய ராஜ்ஜியத்திற்கு நம்மைத் தகுதிப்படுத்திக்கொண்டு, அனுதினமும் ஆத்துமாக்களை ஆதாயம் செய்ய ஜெபிக்கின்ற, அதற்கென்று சாட்சியாய் ஜீவிக்கின்ற, ஊழியர்களைத் தாங்குகின்ற, ஆயத்தப்படுத்துகின்ற தென்னிந்தியத் திருச்சபையின் தமிழ் சபை துபாய் ஐக்கியத்தில் பங்காளிகளாக, தேவனைத் தொழுது மகிழும் யாவருக்காகவும் முழுமனதோடு கர்த்தரைத் துதித்து, தோத்திரங்களை ஏறெடுக்கிறேன்.

நம்மோடும் கர்த்தர்தாமே கூட இருந்து, முன்சென்று பாதைகளைச் செவ்வைப்படுத்தி, அனுதினமும் நம்மை பரிசுத்தப்படுத்தி, பலப்படுத்தி பரிசுத்த தேவனை வாரத்தில் மூன்று ஆராதனைகள் மூலம் தொழுகை செய்ய இறைமக்களாய் கூடி ஆராதிக்க பாக்கியம் தந்து, பாதுகாத்து நாற்பத்து நான்காம் ஆண்டில் UAE-ல் உள்ள தென்னிந்தியத் திருச்சபைகளுக்கு தாய் திருச்சபையாகத் திகழும் பாக்கியம் பெற்ற திருச்சபையின் உறுப்பினர்களாகத் திகழ கிருபை பாராட்டி, நம்மைக் காத்து நடத்திவரும் இஸ்ரவேலின் பிரதான மேய்ப்பராம் நம் தேவாதி தேவனுக்குத் துதி புகழ் கனம் மகிமை யாவும் செலுத்துகிறேன். ஆரம்பம் சொற்பமாக இருந்தாலும், ஏழு எமிரேட்ஸ்-களிலும் கர்த்தரைத் தொழுதுகொள்ள CSI திருச்சபைகள், ஆராதனைகள், ஆயர்கள் என்று கர்த்தரின் நடத்துதலுக்காக நன்றி ஏறெடுக்கிறேன்.

திறப்பிலே நின்று காலையும் மாலையும் திருச்சபைக்காய், திருப்பணிகளுக்காய் ஜெபிக்கின்ற எஸ்தர் போன்ற ஜெப வீராங்கனைகளுக்காய், முகாம்களில் சென்று சகோதரர்களைச் சந்தித்து, அவர்களோடு பேசி, கூடி ஜெபித்து, உடைந்துபோன உள்ளங்களைத் தேற்றி, நெகிழ்ந்த கரங்களைப் பலப்படுத்தி, வேதவசனங்களால் திடப்படுத்தி வரும் நெகேமியா போன்ற ஜெபவீரர்களுக்காய் (முகாம் சந்திப்பு ஊழியர்களுக்காய்), Junior Church, Corner Stone, Youth fellowship, ஆண்கள் மற்றும் பெண்கள் ஐக்கிய சங்க ஊழியங்களுக்காக, Prayer Cell ஊழியங்களுக்காக, எல்லா ஊழிய பொறுப்பாளர்களுக்காக கர்த்தருக்கு கோடாகோடி தோத்திரம் செலுத்துகிறேன்.

தேவன் பாராட்டி வரும் சிறப்பான கிருபை என்றால் நமது திருச்சபையின் ஒவ்வொரு காரியங்களும் ஜெபத்தால் தாங்கப்படுவதேயாகும். ஒருவருக்காக ஒருவர் தொடர்ந்து ஜெபிப்போம். தொடர்ந்து தோத்திர துதிகளை ஏறெடுப்போம்.

அக்டோபர் மாதம் 8-ம்தேதி சனிக்கிழமை மாலை 6:00 மணிமுதல் 8:00 மணி வரை இராஸ் அல் கைமா கிளைச்சபை Harvest Festival பண்டிகை ஆராதனை நடைபெறும். அதன் ஆயத்தங்களுக்காக சபையார் ஜெபிக்க, பங்கு பெற அன்போடு அழைக்கப்படுகின்றீர்கள்.

நமது திருச்சபையின் அரசாங்க அங்கீகாரம், Bank Transaction யாவுக்காக சபையார் ஒவ்வொரு நாளும் குடும்ப ஜெபம், தனி ஜெபங்களில் நினைவுகூற கேட்டுக்கொள்ளப் படுகின்றீர்கள். கர்த்தர்தாமே கிரியை செய்து, திறக்க முடியாத வாசலைத் திறப்பார்.

சபையாக நாம் தாங்கிவரும் மிஷனெரிப்பணிகள், 100 மிஷனெரிமார்கள், மிஷனெரிப் பிள்ளைகள், பார்வை அற்ற, மனவளர்ச்சி குன்றிய சிறுவர்கள், காது கேளாத பிள்ளைகள், பேச முடியாத பிள்ளைகள், யாவருடைய கல்விப் பணிக்காக, நாம் தாங்குகின்ற எல்லா சிறுவர்களுக்காகவும் ஜெபிப்போம்.

துபாய் மாதிரி கிராமம் - கொளகூர் மிஷனெரி மருத்துவ குடும்பம் Dr.Samuel Delightson அவர்கள் குடும்பமாக அதிக பாரத்தோடு செய்துவரும் மருத்துவப் பணிகளுக்காக, உடன் ஊழியர்களுக்காக பாரத்தோடு ஜெபிப்போம்.

ஆபிரகாமின் தேவன் எழுபத்தைந்து வயது முதல் அவரை அனுதினமும் அற்புதமாக நடத்திச் சென்றார். அவர் பெயரைப் பெருமைப்படுத்தினார். அநேகருக்கு ஆசீர்வாதமாக மாற்றினார். கர்த்தர்தாமே தடைகளை அகற்றி, நம் திருச்சபையின் அங்கத்தினர்கள் ஒவ்வொருவரையும் பாதுகாத்து, சாட்சிகளாய் ஜீவிக்க, பிறருக்கு ஆசீர்வாதமாக ஜீவிக்க கிருபை செய்வார். ஆமென்.

Praise be to God.

Babu Jeyaseelan, Secretary.

# நீங்கள் கிறிஸ்தவரா...

"சிறுமைப்பட்டவனுக்குக் கர்த்தர் அடைக்கலமானவர்,
நெருக்கப்படுகிற காலங்களில் அவரே தஞ்சமானவர்."
சங்கீதம் 9:9

இயேசுவின்
தெய்வீகமான
பிறப்பையும்
அற்புதமான
அதிசயமான
செயலையும்
உள்ளபடி எவர்
அறிவாரோ...
அவரே இயேசுவை
வந்தடைவார்.
அச்சமும், ஆசையும்
அணுவும், சினமும்
இல்லாதவர் எவரோ
ஞானவடிவாய்
தவத்தால்
தூய்மையும்
உடையவர் எவரோ
அவரே இயேசுவை
வந்தடைவார்.
உள்ளத்தையும்
உடலையும்
அடக்கியவர்.
உடமைகளை
துறந்தவர்-எவரோ
அவரே இயேசுவின்
சேவகராவார்.
அன்பரே...
எதை உணந்தால்
தீமையினின்று
விடுபடுவோமோ
அந்த காரண
கர்த்தரே இயேசு
என்று அறிவீராக...

பாடுபட்டும்
பலன் இல்லாது
மனம் கேடு...
கெட்டுப் போனவருக்கு
சிறுமை வரலாம்.
பொருளாதாரம்
குன்றியவர்க்கு
வாழ்வில்
இருளான காலம்
வரலாம்.
வறுமையும்
வந்து வந்து
வாட்டுவதும்...
இனி என்ன செய்வது
என மனம் நொந்து
புலம்புவோருக்கும்
சிறுமை எண்ணம்
வரலாம்.
இவை இப்படி இருக்க...
கடலில் தத்தளிக்கும்
படகோட்டிக்கு
கடலின் கரை
தென்படும் போது
சங்கடம் போய்
சந்தோஷம் வருமே
அது போன்று...
எத்தனை...எத்தனை
சோதனைகள்
வேதனைகள்
எதிர் கொண்டாலும்
கர்த்தர் தரும்
அடைக்கலமோ
எதிர் பாராதுவரும்

கோடைக்கால
மழை போலவே
தாகத்தை தணிக்கும்
மனதில்...
மோகன புன்னகை
பூக்கும்.
நான்கு பக்கமும்
தீ பரவும் காலம்
நடுவானில்...நாம்...
நெருக்கப்படும் நேரம்
நாம் அஞ்சும் வேளை
கர்த்தர் தரும்
தஞ்சம் என்பதே
நெஞ்சம்
நெகிழ்ந்து
மகிழும்...
அன்பர்களே!
இயேசுவின்
அன்புக்கரம்
அரவணைக்கும்.
ஆதரவு தரும்
இயேசு நாமம்
ஈன லோகம்
சொல்லுவோமே!!
உலக வாழ்வில்
வெல்லுவோமே!!
செல்லும்
இடமெல்லாம்
ஜெயமாமே!!
அடியாரின்
ஆனந்தம்
இனிதாமே!!!

என்றும் அன்புடன், T. ராஜ்குமார். Mens Fellowship.

# கன்மலை வீடு

கன்மலை வீடு
கட்டிய தோடு
புத்திமான் பேரு
சூட்டினார் ஏசு

கன்மலை மேடு
அடிப்படை யோடு
நன்முறை வீடு
அசைபடாக் கட்டு

சொன்னதைக் கேட்டு
சுயத்தை விட்டு
அன்பினால் நிறைந்தது
ஆண்டவர் அருளு

சொல்லிடக் கேட்பான்
செயல்பட மாட்டான்
அல்வழி போவான்
அல்லலே அடைவான்

மென்மணல் மேடு
மனமகிழ் வீடு
வன்மழை யோடு
வீழ்ந்தது ! கேடு !!

மணலிலே வீடு
பலத்திலே தோடு
துணையிலே யாரு ?
புத்தியிலாப் பாடு !

ஆண்டவரை அண்டு
அன்றன்றுங் கொள்ளு
வேண்டுதலை வென்று
வாழ்வதே வாழ்வு

சுடர்ஒளி நமக்கிருக்கு !
இடர்வழி நமக்கெதுக்கு ?
கதிரொளியில் புறப்படுவோம்
புகழ்ஒளியைப் பரப்பிடுவோம்

இருள்வழியில் மருள்வோரை
அவர்வழியில் ஏற்றிவைப்போம்
அருள்வழியில் ஒளிர்வாழ்வை
ஆற்றுப் படுத்துவோம் !

ஆதாரங்கள் : மத்தேயு 7:24-27
லூக்கா 6:47-49
கவிதை எண் : 252
ஆக்கம் : மணிமுத்து.

## NEW ARRIVALS

"பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்திரம்"

**Master Jeshurun Oswald**
S/o.Mr.Chelliah Jebaraj & Mrs.Julie Jebaraj
26-08-2022

**Miss Thea Roselyn Ajay**
D/0. Mr.Ajay Vincent & Mrs.Blessy Rajan
13-09-2022

"சேனைகளின் தேவனே, திரும்பி வாரும், வானத்திலிருந்து கண்ணோக்கிப்பார்த்து, இந்தத் திராட்சச்செடியை விசாரித்தருளும்." சங்கீதம் 80:14

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, "திருச்சபை ஜெபநாளில்" பங்கு பெற்றுத் தொடர்ந்து ஜெபித்துவரும் ஒவ்வொரு குடும்ப அங்கத்தினர்களுக்கும் சபையின் சார்பில் நன்றி கூறுகின்றோம். தொடர்ந்து மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை தோறும், ஜெபக் குழுக்களிலும் மற்றும் தினந்தோறும் ஜெப நேரம் ஒதுக்கி, ஜெபித்துத் திருச்சபைத் திருப்பணிகளைத் தாங்குங்கள். தேவ ஆசீர்வாதம் உங்களோடிருப்பதாக.

## துதிகள்

★ கர்த்தர் நமக்குத் தந்தருளிய சரீர சுகம், பெலம், ஜீவனுக்காக, திருச்சபை மூலமாக நாம் இம்மட்டும் பெற்றுக்கொண்ட ஐக்கியம் மற்றும் ஆன்மீக நன்மைகளுக்காக நன்றி கூறுவோம்.

★ தேவன் நம் ஜெபத்தைக் கேட்டு நம் மத்தியில் பிரசன்னராயிருந்து, நம்மைத் தாங்கி பெலப்படுத்தியமைக்காக ஸ்தோத்திரம் கூறுவோம்.

★ திருச்சபையின் ஊழியங்கள், ஜெப கூடுகைகள், ஆராதனைகள் யாவும் சிறப்பாக நடைபெற கர்த்தர் பாராட்டின தயவுகளுக்காக நன்றி கூறுவோம்.

★ திருச்சபையின் எல்லா ஆராதனைகளும், எல்லாவிதமான ஊழியங்களும் தேவனுடைய நாம மகிமைக்காக சிறப்பாக நடந்தேற கர்த்தர் பாராட்டின தயவுகளுக்காக நன்றி கூறுவோம்.

## திருச்சபை திருப்பணிகளுக்கான ஜெப வேண்டுதல்கள்

★ நம் குருவானவர்கள், சபை ஊழியர், மற்றும் அவர்களுடைய குடும்பத்தினருக்காக, திருப்பணிகளுக்காக,

★ நம் திருச்சபையின் முன்னாள் குருவானவர்கள், அவர்கள் குடும்பத்தாருக்காகவும், ஆரோக்கியத்திற்காகவும்,

★ நம் திருச்சபைகளைச் சேர்ந்த திருச்சபையினர் அனைவருக்காகவும், ஆங்காங்கே நடைபெறும் ஆராதனைகள், ஊழியங்கள், சிறுவர், வாலிபர், ஆண்கள், பெண்கள் மத்தியில் நடைபெறும் சிறப்பு ஊழியங்கள் மற்றும் முகாம் ஊழியங்களுக்காக,

★ திருச்சபையின் நிர்வாகக்குழு அங்கத்தினர்களுக்காகவும், தேவ சித்தம் நிறைவேற்றும் வகையில் அவர் தம் பணிகளுக்காகவும்,

★ திருச்சபைப் பணிகளை ஜெபத்தோடு உற்சாகமாகவும், உதாரத்துவமாகவும் தாங்கி வரும் திருச்சபை மக்களுக்காக,

★ சிறுவர் வேதபாடசாலைத் திருப்பணிகளில் அர்ப்பணிப்போடு பங்கு பெறும் தேவபிள்ளைகளுக்காக, பயன்பெறும் நம் குழந்தைகளின் இறைபக்திக்காக,

★ நமது திருச்சபையின் ஜெபக்குழுக்களுக்காக, ஐக்கிய, ஆன்மீக வளர்ச்சிக்காக, மிஷனெரி ஊழியங்களுக்காக, தாங்கும் திருச்சபை மக்களுக்காக, மற்றும் மிஷனெரி ஸ்தாபனங்களுக்காக,

★ தென்னிந்தியத் திருச்சபைக்காக, அனைத்துப் பேராயங்கள், நமது பேராயர்கள், குருவானவர்கள், திருப்பணியாளர் அனைவருக்காகவும், திருப்பணிகளுக்காக,

★ கொளகூர் மாதிரி கிராமத்தில் அமைத்துள்ள மருத்துவமனை ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.

## நாட்டுக்காக ஜெப வேண்டுதல்கள்

★ இந்திய நாட்டுக்காக, நாட்டின் தலைவர்கள் மற்றும் அதிகாரம் வகிப்போர் அனைவருக்காகவும், தேசத்தின் வளத்துக்காகவும், வளர்ச்சிக்காகவும், மனிதநேயமும், மத நல்லிணக்கமும் பெருகவும் ஜெபிப்போம். நல்ல இயற்கைச் சூழ்நிலைகள், மழை வளத்துக்காக ஜெபிப்போம்.

★ அரபு ஐக்கியக் குடியரசுக்காக, அதன் தலைவர்களுக்காக, இங்கு வாழும் அனைத்து மக்களின் சமாதானத்துக்காக,

★ உலகத் தலைவர்களுக்காக, சமாதானத்துக்காக, உலகில் தேவ ஆளுகைக்காக,

## நமது ஜெப மன்றாட்டுகள்

★ இந்த மாதத்தில் தேவ வழிநடத்துதல்கள், ஆசீர்வாதங்களுக்காக, பாதுகாப்பு, பராமரிப்பு, சுகம், பெலம் தேவ கிருபைக்காக,

★ நமது குடும்பங்களின் தேவைகளுக்காக மற்றும் ஆன்மீக வளர்ச்சிக்காக, வளமிகு எதிர் காலத்துக்காக,

★ வேலை வாய்ப்புக்காய் காத்திருப்போருக்காக, விசா பிரச்சனைகளில் இருப்போருக்காக, சரீர சுகவீனங்களில் சிகிச்சை பெறுவோருக்காக,

★ திருமணத்திற்காக தெய்வ வழிநடத்துதல் நாடுவோருக்காக, குழந்தை பாக்கியத் திற்காக மற்றும் பிரசவ கால கட்டத்தில் இருப்போர் கிருபைக்காக, குடும்பங்களை விட்டுத் தனியே பணிக்காக வந்தவர்களுக்காக,

★ அனைத்து கல்வி, சமுதாய, மருத்துவ ஊழியங்களுக்காய் ஜெபிப்போம்.

★ பொருளாதார நெருக்கடியினால் வேலையில் ஏற்பட்டுள்ள பிரச்சனைகள் நீங்கவும், பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருடைய தேவைகள் சந்திக்கப்படவும்,

★ குடும்பங்களில், வேலையிடங்களில் மன அழுத்தத்தோடு வாழும் மக்கள் நல்வாழ்வு பெற ஜெபிப்போம்.

★ உலகின், இந்தியாவின், தமிழ்நாட்டின் அரசியல் நிலை சீரடைய ஜெபிப்போம்.

★ கல்வி கற்றுவரும் எல்லா மாணவர்களுக்காகவும் , உயர்கல்விக்காக ஆயத்தப்படும் பிள்ளைகள் ஏற்ற கல்வி பெற்று வாழ்வு உயர்த்தப்படவும் ஜெபிப்போம்.

★ கர்த்தர்தாமே யாவரையும் எல்லாவிதமான நோய்களுக்கும் விலக்கி தம் செட்டைகளின் மறைவில் பாதுகாத்து நடத்தவும், புதிய வேலைவாய்ப்புக்காக காத்திருக்கும் யாவருக்கும் நல்ல வேலைவாய்ப்பைத் தந்து நடத்தவும் ஜெபிப்போம்.

★ நடைபெற இருக்கும் கன்வென்ஷன் கூட்ட ஒழுங்குகளுக்காகவும், Harvest Festival ஒழுங்குகளுக்காகவும் ஜெபிப்போம்.

"நான் தேவனை நோக்கி என் சத்தத்தை உயர்த்திக் கெஞ்சினேன், என் சத்தத்தை தேவனிடத்தில் உயர்த்தினேன், அவர் எனக்குச் செவிகொடுத்தார்." சங். 77:1

**நமக்கென ஓர் ஆலயம் கட்டுவதற்கான இடவசதியும், பொருளாதார தேவைகளும் சந்திக்கப்பட சபையார் தங்கள் தனி ஜெபங்களிலும், குடும்ப ஜெபங்களிலும் ஊக்கமாக தொடர்ந்து ஜெபிக்க அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.**

## பெரியோர்களுக்கான வேதவினா போட்டி

(உன்னதப்பாட்டு 1-8)

கீழ்கண்ட வினாக்களுக்கு உன்னதப்பாட்டு 1-8 அதிகாரங்களிலிருந்து விடைகளை எழுதி 20-ம் தேதிக்குள் போதகருக்கு அனுப்பினால், அனைத்து வினாக்களுக்கும் சரியான விடை எழுதுபவர்களின் பெயர் தூதன் புத்தகத்தில் வெளியிடப்படும்.

1. என் நேசர், என் பிரியமே -
   எத்தனைமுறை குறிப்பிடப்பட்டுள்ளது?
2. "என் நேசர்" சிறப்பைக் குறிப்பிடும் வசனங்களைக் குறிப்பிடுக.
3. சென்றது என்ன? ஒழிந்தது என்ன?
4. வனாந்திரத்திலிருந்து வருகிறவர் எவ்விதமான வாசனையை வீசி, எதைப்போல் வந்தார்?
5. சிங்கார வனத்தில் காணப்பட்ட விருட்சங்கள், செடிகள் எவைகள்?
6. நித்திரையிலும் விழித்திருந்தது என்ன?
7. இன்பமானவை எவை?
   ஊற்றுண்ட பரிமள தைலமாயிருக்கிறது என்ன?
8. நேசம் எதைப்போல் வலிது? நேசவைராக்கியம் எதைப்போல் கொடிதாயிருக்கிறது?
9. நான் என் நேசருடையவள், என் நேசர் என்னுடையவர்,
   எத்தனை முறை குறிப்பிடுடப்பட்டுள்ளது?
10. "என் புறாவே" என்று அழைக்கும் நேசர் குறிப்பிடும் சிறப்புகள் என்ன?

Bro.I.சைமன்,
சபை ஊழியர்.

## செப்டம்பர் 2022 வேதவினா போட்டிக்கான சரியான பதில்கள்

1. பிரசங்கி 2:26
2. பிரசங்கி 1:1,12
3. பிரசங்கி 1:5-6, 7-8
4. பிரசங்கி 3:13
5. பிரசங்கி 3:16
6. பிரசங்கி 3:21
7. பிரசங்கி 5:1,2
8. பிரசங்கி 5:10
9. பிரசங்கி 7:1,2
10. பிரசங்கி 1:2, 12:8

## செப்டம்பர் 2022 வேதவினா போட்டி சரியான பதில் எழுதியவர்கள்

1. திருமதி. அனித்தா ஆல்வின்
2. திருமதி. டயானா ஸ்பென்ஸர் ரூபன்
3. திருமதி. சத்திய வினோதா கிறிஸ்டோபர்
4. திருமதி. செலினா அசோக்
5. திருமதி. நிர்மலா பேட்ரிக்
6. திருமதி. மெர்லின் விஜில்
7. திருமதி. ஜான் பெமி குமாரி டார்வின்
8. திருமதி. புனிதா தாஸ்
9. திருமதி. லீதியா ஆல்வின்
10. திருமதி. செல்லா ஆலன்
11. திருமதி. ரோஸ்லின் ஜெயகுமார்
12. திருமதி. ஜெயகிருபா சாலமோன்
13. திருமதி. இனிதா ஜோனா
14. திருமதி. பொன் டாப்னி ஜான்சன்
15. திருமதி. ஷர்லி சாம்ராபின்
16. திருமதி. ஜெமிமா கிறிஸ்றோபல் ஜாய்ஸ்
17. திரு. V.மோகன்
18. திருமதி. ஷாமினா பென்னி

## BIBLE AND MEDICINE

### 7 FACTS ABOUT MEDICINE AND BIBLE

WE SHOULD UNDERSTAND THE FACT THAT BIBLE HAS NO ERRORS AND SUPERSTITIONS ABOUT ANYTHING IN MEDICINE AND ITS FACTS

IT TOOK SEVERAL HUNDRED YEARS FOR SCIENTIST AND DOCTORS TO DISCOVER FEW MEDICAL FACTS WHICH WERE CLEARLY WRITTEN 2000 YEARS AGO IN BIBLE.

LET'S NOW EXPLORE WHAT BIBLE SAY ABOUT HISTORY OF MEDICINE, DISEASES AND THEIR CAUSES.

1) ANESTHESIA: GENESIS 2:21 - 2000 YEARS AGO ADAM WAS PUT TO DEEP SLEEP BY LORD AND HIS RIB WAS USED TO CREATE EVE.
ANAESTHESIA WAS INVENTED BY ONLY DURING 18TH CENTURY BY MODERN SCIENTIST TO PREVENT PAIN IN THE PATIENTS.

2) SYMBOL OF MEDICINE: NUMBERS 21:8-9 - GOD SENT SERPENTS TO PUNISH THE PEOPLE OF ISRAEL WHEN THEY MURMURED ABOUT GOD TO MOSES.MANY PEOPLE DIED BECAUSE OF THIS.PEOPLE OF ISRAEL REALISED THEIR SIN AND PARDONED BEFORE LORD,THAT WAS WHEN LORD INSTRUCED MOSED TO MAKE THE SERPENTINE SYMBOL AND THOSE WHO LOOKED AT IT WERE HEALED.
TODAY WE UNDERSTAND THAT THE SYMBOL OF MEDICINE IS DERIVED FROM THE BIBLE.

3) MATERNAL DEATH: IN OLDEN DAYS THERE WERE HIGH RATES OF MATERNAL DEATH BECAUSE DOCTORS USED TO PERFORM AUTOPSY OF DEAD PEOPLE AND USED NO HANDWASHING TECHNIQUES BEFORE PERFORMING OBSTETRIC PROCEDURES.

100 YEARS AGO THE SCIENTIST DISCOVERED THE HAND WASHING TECHNIQUE WHICH DRASTICALLY REDUCED THE MATERNAL DEATHS AND OTHER SURGICAL DEATHS

BUT BIBLE CLEARLY SAYS ABOUT INFECTIONS BEING PASSED FROM DEAD BODY AND PEOPLE WHO TOUCH THEM WILL BE UNCLEAN IN THE FOLLOWING BIBLE VERSE: NUMBERS 19:11-12.

4) JOB SYNDROME: JOB2:7 - IN 1966 SCIENTIST DISCOVERED THE JOB SYNDROME NAMED AFTER THE FAITHFUL JOB.

HYPERIMMUNOGLOBULIN IgE SYNDROME IS MANIFESTED BY LONG TERM SKIN INFECTIONS (SKIN SORES ,PUSTULES).

5) QUARANTINE: GENESIS 7:1- NOVA AND HIS FAMILY WAS QUARANTINED FOR ALMOST 1 YEAR BY THE LORD.HE EXPERIENCED THE SEPARATION FROM DEATH AND PLACED HIS TRUST ON THE LORD.HE DINT LEAVE THE ARK UNTIL HE RECEIVED A SIGN FROM LORD .WE WONDERED WHAT IF WE WILL FACE A SITUATION LIKE NOVA!

TODAY WE ALL QUARANTINED OURSELVES DURING THIS COVID PANDEMIC TO SAVE OURSELVES AND STOP THE SPREAD OF DISEASES.

6) BLOOD BORNE DISEASES AND SWINE: LEVI 17:14 LEVI 11:7,8

BIBLE STRICTLY BANS CONSUMPTION OF BLOOD AND SWINE. IT IS CONSIDERED A SIN TO CONSUME BLOOD AND SWINE.

BUT Y??: LETS KNOW ABOUT THE DEADLY DISEASES TRANSMITTED THROUGH,

BLOOD-HIV, HEPATITIS B, HEPATITIS; SWINE-H1N1,GIARDIASIS, SALMONELLOSIS, LEPTOSPIROSIS AND MANY MORE WHICH CAUSED FEW EPIDEMICS ALSO.

7) MENORRHAGIA: MARK 5:25 - EXCESIVE BLEEDING PER VAGINUM IN WOMEN IS KNOWN AS MENORRHAGIA.
WHEN BLEEDING IN WOMEN IS CONSIDERED UNCLEAN

வேதமும் BY PEOPLE EVEN IN TODAYS WORLD,2000 YEARS AGO JESUS THE CREATOR OF UNIVERSE ,THE HOLY GOD WAS NOT HESITANT TO TOUCH THE BLEEDING WOMEN AND PROVED THE WORLD THAT ITS NOT UNTOUCHABILITY ANYMORE.





HENCE WE CONCLUDE THAT BIBLE DOESNT SPEAK SUPERSTITIONS BUT EXPLAINS SCIENCE AND TRUE FACTS.

MANY MORE DISCOVERIES AND HAPPENINGS WILL PROVE THAT EVERY WORD IN BIBLE WILL COME TRUE BEFORE THE SECOND COMING OF THE LORD. AMEN.

Dr. Aditya

There are two people named Ahaziah in the Bible, and both were kings. One was king of the northern kingdom of Israel and the other was king of the southern kingdom of Judah.

*This month kids' corner concentrates on DIVIDED KINGDOM – KING AHAZIAH (8TH KING OF JUDAH) 2 CHRO 22, 2 KINGS 8:25-28, 9:1-29. Answers should have reference.* ***Read, Search, Write.*** *Follow NKJV.*



**LEARN SOMETHING NEW :** Yeshiva- is a place where Jews gather to study Torah and rabbinic traditions. Originally referring to an academy for advanced scholars, today the term also refers to Jewish elementary schools where Judaic studies comprise a significant portion of the curriculum.




## GRADE 3 TO GRADE 5

### CHOOSE THE CORRECT ANSWER

1) King Ahaziah was hiding in _______

   a) Samaria b) Jerusalem C) Shechem

2) Jehoshabeath is King Ahaziah's _______

   a) wife b) sister c) nephew

3) Son of King Ahaziah is _______
   a) Joash b) ashel c) Joab
4) King Ahaziah reigned _______ year in Jerusalem.
   a) 3 yrs b) 5 yrs c) 1 yr
5) King Ahaziah king of Judah, went down to see King Joram in Jezreel, because he was _______
   a) Feasting b) sick c) going to the war

## GRADE 6 TO GRADE 8

1) Who is Ahaziah's mother? How she is related to King Ahab?
2) Who is King Ahaziah?
3) How did King Ahaziah died?
4) Where and by whom king Ahaziah was buried by?
5) Why did Jehu went to Jezreel?

## GRADE 9 AND ABOVE

1) God's mission given to Jehu is to kill all of Ahab's family. Then why did he kill King Ahaziah (King of Judah)?
2) What lessons do you learn from king Ahaziah's life?
3) Where did Joram king of Israel and Ahaziah king of Judah met Jehu?
4) Why Did King Ahaziah King of Judah went to Jezreel?
5) When did King Ahaziah became king?

Priya Singh

## 2022 CALENDER DESIGNING

1) This activity is to design a calender by your own ideas.
2) Every month new template will be there. You can print it down or you can create your own ideas on a chart paper as per desirable size (A4 or half of A4).
3) The matter to be written in October 2022 will be from that month given portion.
4) with every month topic, every month page to be done.
5) No need to sent to me. In December send me all the 12 pages together. The best ones will be published in Thoothan according to their grades.

# OCTOBER 2022

| MONDAY | TUESDAY | WEDNESDAY | THURSDAY | FRIDAY | SATURDAY | SUNDAY |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |

## NOTES

*(Please send your answer to the pastor by 15th of this month)*

## Answers for the month of September 2022 (DIVIDED KINGDOM – KING AHAB - PART 6 (2 CHRO 18, 1 KINGS 22)

### GRADE 3 TO GRADE 5 MIXED BAG :

1) Ahab hate him because he don't prophesy well about him.
2) King Ahab and King Jehoshaphat were sitting at the entrance of the gate of Samaria. Zedekiah (Prophet of Ahab) Prophesied before the king and other Prophets who were gathered there.
3) There was no war for 3 years between Syria and Israel. (1 Kings 22:1)
4) Jehoshaphat said to the king of Israel. (1 Kings 22:40)
5) Micaiah (1 Kings 22:24)
6) Correct the statement : after – between. (1 Kings 22:34)
7) True or false : False (Ahab died at sunset) (1 Kings 22:36)
8) Choose the correct answer : b) dogs (1 Kings 22:38)
9) Number game : King of Syria had commanded the 32 captains of his chariots to go and fight with King of Israel. (1 Kings 22:31)
10) Ahab imprisoned Micaiah and feed him with the bread of affliction and water of affliction till he comes back in peace to Samaria. (1 Kings 22:26-28)

### GRADE 6 TO 8 AND ABOVE

1) Micaiah said, I saw all Israel scattered on the mountains, as sheep that have no shepherd. He said that not only would Israel be defeated, but also that their leader (King Ahab) would perish. King Ahab and others at the court found it hard to explain how one prophet could be right and 400 prophets could be wrong. (1 Kings 22:16-18)
2) Even though King Ahab was upset with Micaiah's words, the prophet went on to explain an additional vision God had shown him. It was a curious scene in Heaven. Micaiah saw "the Lord sitting on his throne," and a host of angels (and perhaps other spiritual beings) standing around God's throne (verse 19). The Lord said to the angelic host, "Who shall persuade (entice) Ahab, that he may go up and fall at Ramoth-gilead?" (Verse 20). God was asking for a volunteer from among the host to go to Ahab and influence him to disregard Micaiah's prophecy so that he would fall at Ramoth-gilead. (1 Kings 22:19-23)
3) Zedekiah struck Micaiah in his cheeks. Ahab imprisoned Micaiah and feed him with the bread of affliction and water of affliction till he comes back in peace to Samaria. (1 Kings 22:24-28, 2 Chro 18:23-27).

4) Prophet Micaiah said, if you ever return in peace, the LORD has not spoken by me. By this people will come to know that God didn't not speak through me.
5) Ahab and Jehoshaphat went into battle, but Ahab told Jehoshaphat to go into battle dressed in his royal throne and he would go in disguise, not wearing his royal robe. Ahab thought he could trick the soldiers into thinking he was just a regular soldier. Ahab did not know that the King of Syria had instructed his soldiers to only kill Ahab. When the soldiers saw Jehoshaphat's robe, they thought he was Ahab and turned to fight him until Jehoshaphat cried out and they realized they had the wrong king. That's when a soldier randomly shot an arrow into the air and it flew through the air and hit King Ahab in between two hard pieces of armor and made him bleed into his chariot. King Ahab stayed out on the battlefield until the sun set and King Ahab had lost so much blood that he died.
When the one who washed the chariots was washing King Ahab's blood from the chariot, the dogs came and licked up King Ahab's blood just like the prophet of God had said. What God said would happen, always happened.

## Last months Childrens Corner prize winner

**Correct answer Participants:**

**GRADE 3 TO GRADE 5** 1) Jonathan Calvin 2) Steve 3) Mark 4) Eric Mic 5) Jasper Jeyakumar 6) Godwin Darwin 7) Jeholin Victo

**GRADE 6 TO GRADE 8** 1) Tiana 2) Trinita 3) Joanna Arlene Christine Solomon

**GRADE 9 AND ABOVE** 1) Maisie Fedora 2) Jerson 3) Jeflin Victo 4) Jaymie Joseph 5) Jaymen Joseph 6) Gracelin



# BIRTHDAY CELEBRANTS - OCTOBER 2022

## DUBAI

1 Mr. John Marshel Earnest
1 Miss Jeshna Gifty Jefferson
1 Miss Shefia Vijil Singh
1 Master Melvin Gabriel Ravi
2 Mr. Joshua Durairaj
2 Mr. Lino Joelsingh
2 Mrs. Bency Ranjith Raj
2 Master Brian Daniel Singh
2 Mrs. A.Vijila Jebamalar Mahiban
2 Mr. I.Gnana Gandhi
2 Master Liam Joshua Merlin Jose
3 Miss Nitya Balan
3 Miss Benitta Sherine Ralstan
3 Miss Jeni Ginesh Selson
3 Miss Jesi Ginesh Selson
3 Master Timon Kumar Praveen Kumar
3 Mr. Allan Madhuram
4 Mr. Yesu Paul Raj
4 Master Nicolin Nepolean
4 Mr. Praveen Charles
5 Master Aaron Darwin Allen Kingsly
5 Master Rexon Paul Sampath
5 Miss Anisha John Kennedy
5 Miss Deva Kiruba Dani Devasahayam
5 Master Ezra Jubal Edwin
5 Miss Joshitha Joshuva
5 Master Adon Jehuel Anand Chandrasekar
5 Mrs. Jaqueline Sheba Jedidiah
5 Mr. Andrew Isaac Raj
5 Master Prince Michael Jerry Nishore
6 Mr. Beven Chris Babu Jeyaseelan
6 Miss Anita Samuel Natarajan
6 Mrs. Shini Stephen Jebadurai
6 Miss Tina Jane Baston Jain Durai
7 Mr. J.Alwyn
7 Mrs. Davitha David Rajesh
7 Mr. Sharvin John
7 Mr. James Selvaraj Jebaselvan
8 Master Jelvin Sam John Selvin
8 Master Joshua Jeyaseelan
8 Mrs. Hepcy Christina Mary Joseph Dominick
8 Master Joshua Santhosh Ponchristopher
8 Miss Alena Geoflin Ashwin Sudharsingh
9 Mr. S.John Christopher
9 Mr. A.Johnson
9 Master Leonel Sam Ebenezer Prabu
9 Mr. Sam Stalin T

10 Mr. S. Jebamani Robert
10 Mr. J.R.Shajin
10 Mr. Christin Solomon Walter
10 Master Iven David
10 Mr. Lambert Gabriel
11 Mr. Henry Vivian Sekar
11 Mrs. Vigitha Shajin
11 Master Aaron Theophilus Charles
11 Mr. Samuel Raja T.
11 Miss Vesna Bright
11 Miss Adora Mariam Glady
11 Mrs. Sumitha Preemakumari
Samson Gilbert
12 Mr. P.Jeya Seelan
12 Mr. Sudhakar Joseph
12 Master Lemuel Christianus Rajesh
12 Miss Nasya Vijay
12 Mrs. Auxy Jerin Kanagaraj
12 Mr. Vinoth Raja
13 Master Jabastin Devamani John
13 Mrs. Josephine Julie C. Jebaraj
13 Mr. C.Britto Vethamani
13 Master Jaden Rodney Jebin Raja
14 Mr. Dawson Richard Ezakiel
14 Mrs. Lavanya Shyam
14 Miss Jenefa Deva Thilak Pandian
14 Miss Movina Moses
14 Miss Asvina Moses
14 Mr.I.Jemil Singh
14 Master Angelo Christopher Arul Raj
14 Master Sheldon Jeshuel Sam Magesh
14 Mr. Samson Arputharaj
15 Mrs. Nalini Prabaharan
15 Mr. Vinoth Ramaiyan
16 Miss Mary Stella Gnanamuthu
16 Mr. Dominic Amal Isa Daniel George
16 Master Nathan Joseph Daniel Jason
16 Master Santino Shine B. Raj
16 Mrs. Beena R
17 Mr. Dhino Suresh
17 Mrs. Deepa Deva Anandhi Johnson
17 Mrs. Daisy Johnson
17 Miss Halen Jaba Chindya Lawrance
18 Mr. Allen Luke Victor Roland
18 Miss Jenita Chris Solomon
18 Master Milan Jeya Prakash
19 Master Jaymen Joseph
19 Miss Jaymie Joseph
19 Miss Stesha Stanley Justin Raj
19 Miss Adlin Rethna Vairavanathan

19 Mrs. Benilin Hepzibah Jebin RajaKumar
19 Master Ryan Arul Emrold Peter
19 Miss Bernice B. Paul
20 Mrs. Diana Anoop
20 Mr. S.Fredrick Luther
20 Mrs. Sylvia Sudhakar
20 Miss Alcina Rosita Jernaus Britto
20 Mr. J.Vijil Israel
20 Master Kelvin Jebastine Kingsley
20 Miss Kezita Jebastine Kingsley
20 Mrs. Jayanthy Solomon
20 Miss Angelin Blessina Anandaraj
20 Miss Dulin Gliffy Gliftan
20 Miss Steffi Priya Dharshani Stanley Jones
20 Mrs. Amutha Jenil Raj
20 Dr. Riamol Cibi Isaac
21 Master Ebi Sam Dhas
21 Mrs. Rajabhi Selwyn
21 Mr. I.Daniel George
21 Dr. Jude Sudhakar Wellington
21 Mrs. Sherly Tabitha Grace Micheal
21 Mr. Ranjith Singh
21 Mr. Stalin Prabhu
22 Miss Sasmija Stalin
22 Mr. V.Selva Kumar
22 Master Joewin Daniel Raj Godwin
22 Master Jason Isaac Santhosh Jemil Singh
22 Master Jerry Brigin Ginesh
22 Mr. John Primson
22 Mr. Oliver Moris Purusothamaraj
23 Mr. C.Rajasekar
23 Mrs. Annee Florance Sheeba Reginald
23 Master Jaden Jason Anand
23 Mrs. Fennela Suresh
23 Mr. Sam Joe Lesly
23 Mrs. C.Subha George
23 Mr. Maher Salal J
24 Mr. Lanien Kanmani
24 Miss Dania Chrisie Mano Harrison
24 Miss Hania Stephie Mano Harrison
24 Miss Adona Praveen Charles
25 Mrs. Sukuraj Paul
25 Miss Cynolin Selvakumar
25 Mr. C.Nelson
25 Miss Felishia Enciletta Justin Robert
25 Mr. T.Charles Santha Kumar
25 Mrs. Jeeza Chrise Yesurajan
25 Master Deva Kiruba Joylin Devasahayam
25 Master Dan Adriel Oliver Moris

26 Mr. Charles Sekar
26 Mr. Ashok Daniel
26 Master Masrino Staenshua Masil
26 Mr. Ralbin Jose
26 Mrs. Stella Raguvaran Manohar
26 Mr. R.James Gnana Prakasam
27 Mrs. Starwin Solomon
27 Miss Jessica Catherene Paul Prabahar
27 Mrs. Preethi Packya Jacob Samuel
27 Master Efren Samuel Benil Thambi
27 Mr. Jobin Vedanayagam
27 Miss Jebisha Ronela Jutson
27 Mrs. Esther Priscilla Arul Prabhu
28 Mr. Benjamin Dineshkar Johnson
28 Mrs. Martha Michavel
28 Mrs. Sheeba Nirmala Andrew
28 Mrs. Sivakumari Reeta Stephen Mashach
28 Mrs. Hepzi Ananth
29 Mrs. Agiema Gracie Tennyson
29 Master Santho Maniraj Manuel Jebaraj
29 Rev. N.Kumara Dhas
29 Master Prasan David
30 Mrs. Deepa Elizabeth Anbalagan
30 Mrs. Annie Nelson
30 Mr. Godson David
30 Miss Arun Pavithra T.
30 Mr. John Singh S.
30 Master Fernandez Jacobraj
30 Mr. George Aldreen A.
31 Miss Parci Gladis Anandaraj
31 Mr. Mahiban Thangadurai
31 Mr. J.Isaac Praveen Kumar
31 Miss Abbyhael Sibi Vetha Raj

## FUJAIRAH

1 Mrs. Ahila Satyanesam Julion Jebasingh
5 Mr. Kendric Prem Daniel Selvaraj
6 Mr. Nivin John S.
7 Miss Glorintha Jeeva Gnana Muthu
8 Mrs. Sherin Satya
8 Master Haniel Triniton Ruban Thana Singh
9 Mr. G.T.Charles
10 Mrs. Vasanthi Navaneetha Kannan
10 Mr. J.Johin Immanuel
10 Mr. S.Anish
11 Mrs. Asha Robin
12 Miss Benita Grace Daniel
13 Mr. C.Perinbam
13 Mr. M.Jino Aswin
15 Master Godson Daniel Rao

15 Master Robinson Durai
16 Master Benhinn Suresh
17 Mrs. Chris Evelyn Veronica Prince
18 Mr. R. Benjamin Raj
19 Master Hudson Samuel Sam Kingsley
19 Mr. Bevin Shalom Stephen
20 Mr. T. Samuelraj Norman
20 Miss Jaswitha Kalyana Sundar
22 Miss Delphia Godwin
24 Mrs. Cynthiya Nelson Sathya
25 Miss Mebelene Samraj
29 Mrs. Sheeba Benjamin Raj
29 Mrs. Joy Bell John Packiaraj
30 Master John David Isravel
31 Mr. B. Jaya Christopher
31 Master Caleb Daniel Ramesh Kumar

## RAS AL KHAIMAH

2 Mr. Eban Yesudian Nayagam
2 Mrs. J.Padma Priya Johnson
2 Mrs. T.Suganthi Prince
6 Mrs. Gnana Suganthi Jebaraj Joshua
7 Master P.J.Agnes G.P.R.Sam
8 Master Servan Raj
8 Mrs. J.Sherin Satya
9 Miss Mercy Deva Prakash
13 Mrs. Sathia Sheeja Rani Jayasingh David
13 Mrs. Anitha George Rose
14 Mr.Nelson Jegatheesan
14 Mrs. D.Belvin Jesilet
15 Mr. Reeves Nayagam
16 Mr. G.Daniel
16 Mr. Kelvin John
19 Miss Breety Joanna Rajesh
20 Mr. Jaya Nirmal Prasath
20 Mr. Hari Babu C.
21 Miss Remelin Rajula Regi
22 Mrs. Sheeba Prakash
23 Master Evans Henry Lawrence
23 Master R.V.Bensto
26 Mrs. Christin Jeba Latha K Johnson
26 Master Rejolin Kirupa Johnson
26 Miss Liona Gibbs
28 Miss Reshona Bernard
28 Miss Kanmani Vincent
31 Mrs. G.Jasmine Prabha Albin Jayaraj

# WEDDING CELEBRANTS - OCTOBER 2022

## DUBAI

1 Mr. & Mrs. Dass Prakash Yesubatham

3 Mr. & Mrs. Muthu Raj

4 Mr. & Mrs. Adithya Bhat

4 Mr. & Mrs. Jenil Raj

6 Mr. & Mrs. P.Anand Raja

9 Mr. & Mrs. Shajan Abrain Raj

11 Mr. & Mrs. B.Jeyakumar

13 Mr. & Mrs. R.Jebakumar

18 Mr. & Mrs. G.Paul

18 Mr. & Mrs. Derekson Daniel

20 Mr. & Mrs. D.M.John Kennedy

21 Mr. & Mrs. Edwin Bright

23 Mr. & Mrs. S.John Christopher

24 Mr. & Mrs. T. Nepolean

24 Mr. & Mrs. Satish Daniel

26 Mr. & Mrs. Santha Kumar S.

27 Mr. & Mrs. Allen Kingsly

27 Mr. & Mrs. V.Jayakumar

28 Mr. & Mrs. S.Joseph Dominick

29 Mr. & Mrs. N. Gnana Sekar

31 Mr. & Mrs. Theodore Kirupakaran

## FUJAIRAH

4 Mr. & Mrs. Alvin Dominic Raj

8 Mr. & Mrs. Arputharaj A.

## RAS AL KHAIMAH

12 Mr. & Mrs. Gibbs Justin

18 Mr. & Mrs. J.Regin Bernard

## வாழ்த்துகிறோம்

கர்த்தருடைய கிருபையால் ஆகஸ்ட் மாதம் 31-ம் தேதி
பரிசுத்த மெய் விவாகத்தின் மூலம் குடும்பமாக இணைக்கப்பட்டுள்ள

Mr. Andrew Levin Raj & Mrs. Adlin Vinny

கர்த்தருடைய கிருபையால் செப்டம்பர் மாதம் 26-ம் தேதி
பரிசுத்த மெய் விவாகத்தின் மூலம் குடும்பமாக இணைக்கப்பட்டுள்ள

Mr. J.R.Praveen & Mrs. V.Sharley

கர்த்தருடைய கிருபையால் செப்டம்பர் மாதம் 26-ம் தேதி
பரிசுத்த மெய் விவாகத்தின் மூலம் குடும்பமாக இணைக்கப்பட்டுள்ள

Mr. S.Samuel Dilton & Mrs. Priyanka

இவர்களை திருச்சபையாக வாழ்த்துகிறோம்.

Mini Bible Character Study Book



# SARAH

Sarah is my favorite woman in the Bible. Sarah is included in the Hall of Faithful Heroes. Sarai (whose name meant Princess, and was later changed by God to 'Sarah' which meant 'mother of nations') was the daughter of a wealthy Chaldean tribesman named Terah. She married Abram, her half-brother.

## # 1 SARAI JOURNEYED BRAVELY INTO THE UNKNOWN

Sarai left her family, her wealth and position to follow her crazy husband to "a land God would show him." (1,426 miles). She willingly obeyed.

## # 2 SARAI'S TEST OF TRUST AND SUBMISSION

Sarai's next test was to lie for Abram to Pharaoh. She was gorgeous. Abram willingly offered Sarai to the powerful Egyptian ruler because he knew Sarai was beautiful and he feared Pharaoh would want her as his wife. Sarai obeyed Abram, though she shook in her sandals and hid in Pharaoh's harem.

### #3 SARAI TRUSTED GOD IN A TOUGH SITUATION

for this is the way the holy women of the past who put their hope in God used to adorn themselves. They submitted themselves to their own husbands, like Sarah, who obeyed Abraham and called him her lord. (1 Pet 3:5-6)

### # 4 SARAI GREW IMPATIENT AND RAN AHEAD OF GOD

Sarai, like all of us, often faltered in her faith. God promised to make Abram the "father of many nations" (Gen. 17:4) but she was barren. So, like most conniving (or desperate) women, Sarai went into "fix-it" mode and gave Abram her maidservant Hagar to produce a son. It was a lousy practice, but it was customary in her society.

## Application

1) **Nothing is Impossible with God: while God answers prayer, He doesn't always answer it in the way we think He should. He has plans we can't even fathom.**

2) **God always delivers on His promises: Many years after God made the promise to Abraham, He delivered!.He never forgets a promise.**

3) **God's Timing is Always Perfect: God always answers, but in His perfect timing and not ours.**

# தினசரி வேத வாசிப்புப் பகுதிகள் - அக்டோபர் 2022

உமது வேதத்திலுள்ள அதிசயங்களை நான் பார்க்கும்படிக்கு,
என் கண்களைத் திறந்தருளும். சங்கீதம் 119:18

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 1 இராஜா. 3 | எபேசி. 1 | எசேக். 34 | சங்கீதம் 83,84 |
| 2 | 1 இராஜா. 4,5 | எபேசி. 2 | எசேக். 35 | சங்கீதம் 85 |
| 3 | 1 இராஜா. 6 | எபேசி. 3 | எசேக். 36 | சங்கீதம் 86,87 |
| 4 | 1 இராஜா. 7 | எபேசி. 4 | எசேக். 37 | சங்கீதம் 88 |
| 5 | 1 இராஜா. 8 | எபேசி. 5 | எசேக். 38 | சங்கீதம் 89 |
| 6 | 1 இராஜா. 9 | எபேசி. 6 | எசேக். 39 | சங்கீதம் 90 |
| 7 | 1 இராஜா. 10 | பிலிப். 1 | எசேக். 40 | சங்கீதம் 91 |
| 8 | 1 இராஜா. 11 | பிலிப். 2 | எசேக். 41 | சங்கீதம் 92,93 |
| 9 | 1 இராஜா. 12 | பிலிப். 3 | எசேக். 42 | சங்கீதம் 94 |
| 10 | 1 இராஜா. 13 | பிலிப். 4 | எசேக். 43 | சங்கீதம் 95,96 |
| 11 | 1 இராஜா. 14 | கொலோ. 1 | எசேக். 44 | சங்கீதம் 97,98 |
| 12 | 1 இராஜா. 15 | கொலோ. 2 | எசேக். 45 | சங்கீதம் 99-101 |
| 13 | 1 இராஜா. 16 | கொலோ. 3 | எசேக். 46 | சங்கீதம் 102 |
| 14 | 1 இராஜா. 17 | கொலோ. 4 | எசேக். 47 | சங்கீதம் 103 |
| 15 | 1 இராஜா. 18 | 1 தெசலோ. 1 | எசேக். 48 | சங்கீதம் 104 |
| 16 | 1 இராஜா. 19 | 1 தெசலோ. 2 | தானியேல் 1 | சங்கீதம் 105 |
| 17 | 1 இராஜா. 20 | 1 தெசலோ. 3 | தானியேல் 2 | சங். 106 |
| 18 | 1 இராஜா. 21 | 1 தெசலோ. 4 | தானியேல் 3 | சங். 107 |
| 19 | 1 இராஜா. 22 | 1 தெசலோ. 5 | தானியேல் 4 | சங். 108,109 |
| 20 | 2 இராஜா. 1 | 2 தெசலோ. 1 | தானியேல் 5 | சங். 110,111 |
| 21 | 2 இராஜா. 2 | 2 தெசலோ. 2 | தானியேல் 6 | சங். 112,113 |
| 22 | 2 இராஜா. 3 | 2 தெசலோ. 3 | தானியேல் 7 | சங். 114,115 |
| 23 | 2 இராஜா. 4 | 1 தீமோ. 1 | தானியேல் 8 | சங். 116 |
| 24 | 2 இராஜா. 5 | 1 தீமோ. 2 | தானியேல் 9 | சங். 117,118 |
| 25 | 2 இராஜா. 6 | 1 தீமோ. 3 | தானியேல் 10 | சங். 119:1-24 |
| 26 | 2 இராஜா. 7 | 1 தீமோ. 4 | தானியேல் 11 | சங். 119:25-48 |
| 27 | 2 இராஜா. 8 | 1 தீமோ. 5 | தானியேல் 12 | சங். 119:49-72 |
| 28 | 2 இராஜா. 9 | 1 தீமோ. 6 | ஓசியா 1 | சங். 119:73-96 |
| 29 | 2 இராஜா. 10 | 2 தீமோ. 1 | ஓசியா 2 | சங். 119:97-120 |
| 30 | 2 இராஜா. 11,12 | 2 தீமோ. 2 | ஓசியா 3,4 | சங். 119:121-144 |
| 31 | 2 இராஜா. 13 | 2 தீமோ. 3 | ஓசியா 5,6 | சங். 119:145-176 |